உங்கள் அபிமான தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 02.07.2026 • மலர் 04 • இதழ்: 183 • வியாழக்கிழமை • Edition : Nagercoil • 02.07.2026 • Vol : 04 • Issue : 183 • Page : 4 • Rs. 5/-

# எங்களுக்கு பதவி வேண்டாம்

## எஸ்.பி.வேலுமணி, நத்தம் விஸ்வநாதன் அறிக்கை; அதிமுகவில் மீண்டும் கலகம்

சென்னை, ஜூலை 2

சட்டமன்ற தேர்தலுக்கு பின்னர் தமிழக அரசியலில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. சுமார் 60 ஆண்டுகாலம் தமிழகத்தை ஆண்ட தி.மு.க. மற்றும் அ.தி.மு.க.வுக்கு பதிலாக த.வெ.க. என்னும் புதிய கட்சி ஆட்சி அதிகாரத்தை பிடித்துள்ளது. அதுவும் 70 ஆண்டுகளுக்கு பிறகு முதல் முறையாக கூட்டணி அரசு அமைந்துள்ளது.

இதில் தி.மு.க.வை பொறுத்தவரை, அந்த கட்சி தலைமையிலான கூட்டணியில் இருந்த காங்கிரஸ், கம்யூனிஸ்டு கட்சிகள், விடுதலை சிறுத்தைகள் மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் தற்போது விஜய் தலைமையிலான த.வெ.க. அரசுக்கு ஆதரவு அளித்தன. சமீபத்தில் ம.தி.மு.க.வும் தி.மு.க. கூட்டணியை விட்டு விலகியுள்ளது. தமிழகத்தின் மற்றொரு பிரதான கட்சியான அ.தி.மு.க.வில், தேர்தல் தோல்விக்கு பின்னர் அக்கட்சியின் முன்னணி தலைவர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதனால் முன்னாள் அமைச்சர்கள் எஸ். பி. வேலுமணி, சி.வி.சண்முகம் தலைமையில் 25 எம்.எல்.ஏ.க்கள் தனி அணியாக பிரிந்து செயல்பட்டனர். சட்டசபையில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் அவர்கள், கட்சி கட்டளையை மீறி த.வெ.க. அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர். எனவே அவர்களின் கட்சிப்பதவிகளை பறித்து, கட்சித்தலைமை நடவடிக்கை எடுத்தது. இதனிடையே மரகதம் குமரவேல், சத்தியபாமா, ஜெயக்குமார். இசக்கி சுப்பையா ஆகிய அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் தங்களது பதவியை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க. வில் இணைந்தனர். இதேபோல் முன்னாள் அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கரும் தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு கட்சியில் இருந்து விலகினார். அடுத்த அதிர்ச்சியாக கரூர் எம்.எல்.ஏ. எம்.ஆர்.விஜயபாஸ்கர், நேற்று முன்தினம் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

இந்த பரபரப்பு அடங்கும் முன், அவர் நேற்று அ.தி.மு.க.வில் இருந்தும் விலகுவதாக அறிவித்தார். இந்த பரபரப்புக்கு மத்தியில் கட்சிப்பதவி பறிக்கப்பட்ட எஸ்.பி.வேலுமணிக்கு துணைப்பொதுச்செயலாளர் பதவி வழங்குவதாக எடப்பாடி பழனிசாமி அறிவித்தார். ஆனால் அவர் தனக்கு கோவை தெற்கு மாவட்ட செயலாளர் பதவி கிடைக்கும் என எதிர்பார்த்தார். அது கிடைக்கவில்லை. அதே நேரம் கோவை புறநகர் தெற்கு மாவட்ட செயலாளராக பொள்ளாச்சி ஜெயராமன் நியமிக்கப்பட்டார். இதனால் அதிருப்தியில் இருந்த எஸ்.பி.வேலுமணி, கட்சித்தலைமைக்கு எதிராக மீண்டும் போர்க்கொடி தூக்கியுள்ளார். இதற்கிடையே, எங்களுக்கு பதவி வேண்டாம் என்று எஸ்பி வேலுமணி உள்ளிட்டோர் தெரிவித்துள்ளனர்.



தாங்கள் நியமித்த பதவிகள் எங்களுக்கு வேண்டாம். நாங்கள் என்றும் கழக உறுப்பினர்களாக இருந்து செயல்படுகிறோம் தாங்கள் வழங்கியுள்ள கட்சி பதவிகளை ஏற்று, கழகப் பணியில் எங்களை ஈடுபடுத்திக் கொள்ள இயலாத சூழ்நிலையை நீங்கள் உருவாக்கியுள்ளீர்கள் என்று எஸ்.பி.வேலுமணி, நத்தம் விஸ்வநாதன், கே.பி.அன்பழகன், பி.தங்கமணி உள்ளிட்ட அதிமுக முக்கிய நிர்வாகிகள் கூறியுள்ளனர். இதனால் அதிமுகவில் மீண்டும் உள்கட்சி குழப்பம் அதிகரித்துள்ளது.

## பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் குற்றங்களை கட்டுப்படுத்துவதில் சிறப்பாக செயல்பட்ட குமரி மாவட்ட எஸ்.பி ஸ்டாலினுக்கு முதலமைச்சர் விருது வழங்கி சிறப்பித்தார்




நாகர்கோவில், ஜூலை. 2

சென்னை தலைமை செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நேற்று மாவட்ட கலெக்டர்கள், காவல் துறை மற்றும் வனத்துறை உயர் அதிகாரிகளின் மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டின் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதில் சிறப்பாக பணியாற்றிய காவல்துறை அதிகாரிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன

இதில், கன்னியாகுமரி மாவட்ட எஸ்.பி ஸ்டாலின் மாவட்டத்தில் சட்ட விரோதச் செயல்களைத் தடுத்தது, மதுவிலக்கு அமலாக்கம் மற்றும் குற்றச் சம்பவங்களைக் குறைப்பதில் காட்டிய தீவிரமான செயல்பாடுகளை அங்கீகரிக்கும் வகையில் தமிழக முதலமைச்சர் ஜோசப்விஜய் விருது வழங்கி சிறப்பித்தார். இந்த நிகழ்வில் அமைச்சர்கள் மற்றும் தலைமை செயலாளர் சாய்குமார் உட்பட்ட உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தவெக எம்.எல்.ஏக்களிடம் ரூ.50 கோடி வரை பேரம் பேசுகின்றனர்: அமைச்சர் நிர்மல் குமார் குற்றச்சாட்டு

சென்னை, ஜூலை 2

சென்னையில் அமைச்சர் சிடிஆர் நிர்மல் குமார் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: ஸ்டாலினும், எடப்பாடியும் சேர்ந்து குறுக்கு வழியில் ஆட்சி அமைக்க முயற்சி செய்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு இருந்தோம். அதனுடைய வெளிப்பாடுதான் இது. அவர்கள் அனைவரும் தி.மு.க.வைச் சேர்ந்த முக்கிய நபர்கள். செந்தில் பாலாஜி போன்றவர்கள். ஸ்டாலினுடைய உத்தரவின் பேரில், உதயநிதியின் உத்தரவின் பேரில், எங்களுடைய பல எம்.எல்.ஏ.க்களை தொடர்பு கொண்டு, 'நாங்கள் உங்களுக்கு ரூ.10 கோடி தருகிறோம், ரூ.20 கோடி தருகிறோம், ரூ.50 கோடி தருகிறோம்' என்று ஒவ்வொருவராக தொடர்புகொண்டு, ஒரு மாதமாக தொடர்புகொள்ளாத நாட்களே இல்லை. அனைவரிடமும் ஒவ்வொரு வழியாக பேசிக்கொண்டே வருகிறார்கள்.

சட்டப்பூர்வமாக இவ்விவகாரத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு எம்.எல்.ஏ.வை தொடர்புகொண்டிருக்கிறார்கள். அவர் வேண்டாம் என்று சொன்னதும்,

அவரிடம் மிரட்டும் தொனியில் பேசியிருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில், பணம் கொடுக்க முற்பட்டவர்கள் கையும் களவுமாக போலீசார் கைது செய்துள்ளனர். நரேஷ், தியாகராஜன் என மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நரேஷ் என்பவர் செந்தில் பாலாஜி மற்றும் அவருடைய தம்பி அசோக் குமாருடன் நேரடியாக தினமும் பேசியிருக்கிறார். ஒவ்வொரு நாளும் இது தொடர்பாக எல்லா தொடர்புகளையும் வைத்திருக்கிறார். எவ்வளவு பணம்



கொடுக்க வேண்டும், எந்தெந்த எம்.எல்.ஏ.க்களை வாங்க வேண்டும் என்று பேசியிருக்கிறார்கள்.

இது தொடர்பாக மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுபோன்ற கேவலமான, கீழ்த்தரமான வேலையை ஸ்டாலினும், உதயநிதியும், அவர் கையில்வைத்திருக்கும் செந்தில்பாலாஜி போன்றவர்களை முடுக்கிவிட்டு, எம்.எல்.ஏ.க்களிடம் ரூ.50 கோடி வரை பேரம் பேசப்பட்டு வருகிறது. இதனால் தான் ஸ்டாலின் ஒவ்வொரு இடத்திலும் '30 நாள்' என்று சொல்கிறார். ஒவ்வொரு எம்.எல்.ஏ.விடமும் பேரம் பேசுகிறார்கள். 'சபாநாயகர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவோம். அதற்கு நீங்கள் வாக்களிக்க வேண்டும்' என்று கேட்டுள்ளனர்.

இதை பல எம்.எல்.ஏ.க்கள் புகாரளித்துள்ளனர். சிலர் மிரட்டப்பட்டுள்ளனர். மிரட்டப்பட்ட எம்.எல்.ஏ. ஒருவர் இன்று புகாரளித்துள்ளார். இதை இவர்கள் விடாமல் செய்துகொண்டு இருக்கிறார்கள். மக்கள் அனைவரும் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். லட்சக்கணக்கான கோடி கொள்ளையடித்துவிட்டு, இப்போது சும்மா இருக்க முடியாமல் குறுக்கு வழியில் முயற்சி செய்கிறார்கள்" என்று கூறினார்.

## ஊத்தங்கரை தவெக எம்எல்ஏவிடம் ரூ.35 கோடி பேரம்: 3 பேர் கைது



சென்னை, ஜூலை 2

தமிழக வெற்றி கழகத்தின் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி உறுப்பினரான என். இளையராஜா சில தினங்களுக்கு முன்பு கைபேசியில் தொடர்பு கொண்ட திருநாவுக்கரசு என்ற நபர், தான் இந்திய அரசியல் ஜனநாயக உத்திகள் (IPDS) என்ற கருத்து கணிப்பு நிறுவனத்தை நடத்தி வருவதாகவும், ஒரு முக்கிய கட்சியை சேர்ந்த சிலர் கேட்டு கொண்டதன்பேரில் தொடர்பு கொள்வதாகவும், நேரில் சந்திக்க வேண்டும் என்றும் பேசியுள்ளார். ஆனால், தான் வேறு பணியில் இருப்பதாக கூறி இளையராஜா தொடர்பை துண்டித்துள்ளார்.

ஆனால், மீண்டும் தொடர்பு கொண்ட மேற்படி திருநாவுக்கரசு, இளையராஜாவிடம், தமிழ்நாடு சட்டப்பேரவையில் சபாநாயகருக்கு எதிராக தீர்மானம் கொண்டு வர உள்ளதாகவும், ஆளுங்கட்சி உறுப்பினராக இருந்தாலும் அத்தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பின்போது தாங்கள் நடந்துகொள்ள வேண்டும் என்றும், அதற்கு சன்மானமாக ரூ.35 கோடி வரை தருவதாகவும் ஆசை வார்த்தை காட்டியுள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த இளையராஜா எனக்கு விருப்பமில்லை. இனிமேல் என்னிடம் பேசாதீர்கள் என்று கண்டிப்புடன் கூறியபோது. தான் பேசியது குறித்து வெளியே தெரிவித்தால் இளையராஜாவும் அவரது குடும்பத்தினரும் பின்விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று திருநாவுக்கரசு மிரட்டியுள்ளார்.

இதனால் சட்டமன்ற உறுப்பினர் என்.இளையராஜா 29.06.2026 அன்று சென்னை பெருநகர காவல் ஆணையரிடம் அளித்த புகாரில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொது ஊழியரான தன்னிடம் தனது மக்கள் பணியை செய்யக் கூடாது என்பதற்காகவும், தனது பேச்சுக்கு உடன்பட லஞ்சம் தர முயற்சித்ததோடு. தனக்கும், தனது குடும்பத்தினருக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் திருநாவுக்கரசு மற்றும் அவருக்கு பின்புலமாக செயல்படும் நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கக் கோரியிருந்தார்.

அப்புகாரின்பேரில், டி1( D1) திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. புலன் விசாரணையின் அடிப்படையில் சம்பவத்தில் ஈடுபட்ட சென்னை அரும்பாக்கத்தை சேர்ந்த திருநாவுக்கரசு மற்றும் அவருக்கு பின்னணியாக செயல்பட்ட திருச்சியை சேர்ந்த நரேஷ், சென்னை மேடவாக்கத்தை சேர்ந்த தியாகராஜன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் புலன் விசாரணையில் திமுக முன்னாள் அமைச்சரும், தற்போதைய கோயம்புத்தூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினருமான வி. செந்தில்பாலாஜியின் சகோதரர் வி.அசோக்குமார் என்பவர் இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரி நரேஷை சென்னையில் சந்தித்ததும், வி. செந்தில்பாலாஜி மற்றும் வி.அசோக்குமார் ஆகியோரின் அறிவுரையின் பேரிலேயே எதிரி திருநாவுக்கரசு வழக்கின் புகார்தாரரான சட்டமன்ற உறுப்பினர் இளையராஜாவை தொடர்பு கொண்டு இது போன்ற செயல்களில் ஈடுபட்டதும் தெரிய வந்துள்ளது. மேலும் இவ்வழக்கில் காவல் துறையினர் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றன.

## அதானியின் அல்லேரி நீரேற்றுப் புனல்மின் திட்டத்தை ரத்து செய்க: சீமான்



சென்னை, ஜூலை 2

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ் சமூகத்தின் நீண்ட பண்பாட்டுடன் தொடர்புடைய கிழக்குத்தொடர்ச்சி மலைப்பகுதிகளில் முக்கிய அங்கமான ஜவ்வாது மலையின் இயற்கை வளங்களையும், அரிய உயிரினங்களையும் அழித்து, கார்ப்பரேட் நிறுவனங்களிடம் ஒப்படைக்க முயலும் தமிழ்நாடு அரசின் மக்கள் விரோத, சூழல் விரோத நடவடிக்கையை நாம் தமிழர் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா விற்குட்பட்ட அரசம்பட்டு காப்புக்காட்டில் உள்ள அல்லேரி மலையில் 1,800 மெகாவாட் திறன் கொண்ட நீரேற்றுப் புனல்மின்திட்டத்திற்காக 25.11.2025 அன்று தமிழ்நாடு பசுமை எரிசக்திக் கழக நிறுவனமானது அதானி குழுமத்தைச் சேர்ந்த அதானிஹைட்ரோ போர்டின் லிமிடெட் (ADANI HYDRO ENERGY FOURTEEN LIMITED) நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டிருந்தது.

கனிம வளங்களையும், இயற்கை வளங்களையும் சுரண்டி லாபம் ஈட்டும் நிறுவனத்திடம் தமிழ்நாட்டின் அரிய காடுகளையும் நீராதாரங்களையும் ஒப்படைப்பது எந்த வகையிலும் ஏற்க முடியாதது. தமிழர்களின் வாழ்வாதாரத்தை விட, கார்ப்பரேட் முதலாளிகளின் லாபம் தான் இந்த அரசுக்கு முக்கியமா என்கிற கேள்வி எழுகிறது.

இந்தத் திட்டத்திற்காக கையகப்படுத்தப்படவுள்ள 337.452 ஹெக்டேர் நிலப்பரப்பில் 228.352 ஹெக்டேர் அரசம்பட்டு காப்புக்காடாகும். மேல் மற்றும் கீழ் நீர்த்தேக்கங்கள் அமைப்பதன் மூலம் இந்த அடர்ந்த காடுகள் நீரில் மூழ்கும் பேராபத்து ஏற்பட்டுள்ளது.

அரசம்பட்டு காப்புக்காடு வெறும் மரங்கள் நிறைந்த பகுதியல்ல; ஆயிரக்கணக்கான உயிரினங்களின் வாழ்விடமாகும். குறிப்பாக சாம்பல் இருவாச்சி, வெண்முதுகு ஆந்தை, புள்ளி ஆந்தை உள்ளிட்ட பல அரிய பறவைகள், உலகிலேயே ஜவ்வாது மலையில் மட்டுமே காணப்படும் ஜவ்வாது இலைச்சருகு அரணை (Jawadhu leaflitter skink), இலங்கை மரந்தாவும் பாம்பு, மலபார் குழி விரியன், எறும்புத்தின்னி, தேவாங்கு, மலபார் மலை அணில், செந்நாய், காட்டு மாடு மற்றும் நூற்றுக்கும் மேற்பட்டக் கரடிகள் உள்ளிட்ட பல அரிய உயிரினங்களின் புகலிடமாக இப்பகுதி விளங்குகிறது. இவ்வளவு முக்கியமான உயிரியல் வளத்தை அழிப்பது இயற்கைக்கு எதிரான வரலாற்றுப்பிழையாகும்.

அல்லேரி மலையிலிருந்து பாயும் நீரை நம்பியே மலையடிவாரப் பகுதிகளில் உள்ள ஏரிகள், கிணறுகள் மற்றும் விவசாய நிலங்கள் செழித்து வருகின்றன. புவிசார் குறியீடு (GI) பெற்ற இலவம்பாடி முள் கத்தரிக்காய் உள்ளிட்ட விவசாய உற்பத்திகளும் இந்த மலைகளில் இருந்து கிடைக்கும் நீராதாரத்தைச் சார்ந்தே உள்ளன.

சூழலியல் பாதிப்பு ஒரு புறம் இருக்க, பொருளாதார அடிப்படையிலும் இந்தத் திட்டம் தமிழ்நாட்டு மக்களுக்கு பெரும் சுமையாக அமையும். இத்திட்டத்தின் வழி உற்பத்தியாகும் மின்சாரத்தின் அடக்க விலை யூனிட்டுக்கு ரூ.9.10 எனக் கூறப்படுகிறது. நிறுவனத்தின் லாபத்துடன் சேர்ந்து தமிழ்நாடு அரசுக்கு விற்கப்படும் விலை ரூ.10ஐத் தாண்டும். அதே நேரத்தில், நவீன தொழில்நுட்பத்தில் சூரிய ஆற்றல், காற்றாலை மற்றும் மின்கல சேமிப்பு வசதிகள் மூலம் குறைந்த செலவில் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். ஏற்கனவே பெரும் கடன் சுமையில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மீது மேலும் பொருளாதாரச் சுமை ஏற்றுவது எந்த நியாயமும் இல்லை.

எனவே அல்லேரி, தென்மலை, ஆழியார் உள்ளிட்ட வனப்பகுதிகளில் நீரேற்றுப் புனல்மின் திட்டங்களை அமைப்பதற்காக அதானி குழுமத்துடன் மேற்கொள்ளப்பட்ட அனைத்து ஒப்பந்தங்களையும், தமிழ்நாடு அரசு உடனடியாக ரத்து செய்ய வேண்டும். மத்திய அரசு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கினாலும், மாநில வனத்துறை இந்தத் திட்டத்திற்கு அனுமதி மறுக்க வேண்டும்.

தமிழர்களின் மண்ணையும், மலைகளையும், நீரையும், காடுகளையும் கார்ப்பரேட் நிறுவனங்களின் லாபத்திற்காக அழிக்க முயன்றால், அதை ஒருபோதும் நாம் தமிழர் கட்சி அனுமதிக்காது. இயற்கையையும், மக்களின் வாழ்வாதாரத்தையும் காக்க நாம் தமிழர் கட்சி மக்களைத் திரட்டி மக்களாட்சி வழியில் மாபெரும் அறப்போராட்டங்களை முன்னெடுத்து இந்தத் திட்டத்தை முறியடிக்கும் என்பதை தமிழ்நாடு அரசுக்கும், மத்திய அரசுக்கும் எச்சரிக்கையாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம். பட்டதாரி. தமிழில் உரையாடுதல். தமிழில் பிழையின்றி எழுதுதல். தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

### இன்றைய இளைஞர்கள் மனநிலை பற்றிய

# "'பிரெண்ட்ஷிப் ஆஸ் வெல்பீயிங் இன் த ஏ ,ஐ ஈரா" நூல் வெளியீடு

ன்னை,ஜூலை1,

இந்தியாவில் உள்ள 24 மாநிலங்களைச் சேர்ந்த 4,527 இளைஞர்களிடம் ஒரு தேசிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதன்படி, 88.5 சதவிகித இந்திய இளைஞர்கள், தங்கள் மனநல ஆரோக்கியத்திற்கு நட்பு மிகவும் அவசியமானது என்று கருதுகின்றனர். அதே சமயம், நண்பர்கள் புடைசூழ இருந்தாலும், 76.8 சதவிகித இளைஞர்கள் தனிமையை அனுபவிப்பதாகவும் தெரிவித்துள்ளனர். இந்த இளைஞர்களில் 56.20 சதவிகிதத்தினர் நகர்ப்புறத்தைச் சேர்ந்தவர்கள், 43.8 சதவிகிதத்தினர் ஊரகப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள். மேலும், இதில், 54.8 சதவிகிதத்தினர் பெண்கள், 45.1 சதவிகிதத்தினர் ஆண்கள் ஆவர்.

இந்த விவரங்கள், அருட்தந்தை ஜான் அலெக்சாண்டர் எஸ்.டி.பி. அவர்களின் ''பிரெண்ட்ஷிப் ஆஸ் வெல்பீயிங் இன் த ஏ ,ஐ ஈரா " நூலில் இடம்பெற்றுள்ளது. இந்த நூல் இன்று சென்னையில் வெளியிடப்பட்டது.

இந்தப் புத்தகம், முன்னெப்போதும் இல்லாத உறவுச் சிக்கல்களான டிஜிட்டல் சுமை, இடப்பெயர்ச்சி, சமூக சிக்கல்கள் கல்விச் சுமை, ஆகிய சிக்கல்களை வலிமையோடும், அற உணர்வோடும் எதிர்கொண்டு வரும் இளைய தலைமுறையினரைப் பற்றிப் பேசுகிறது. இந்த உண்மை இதுவரை அங்கீகரிக்கப்படவில்லை என்பது இங்கே கவனிக்கத்தக்கது.

இந்த ஆய்வு முடிவுகளில் வேறு சில விவரங்களும் தெரிய வந்துள்ளன. குறிப்பாக, 58.6 சதவிகித இளைஞர்களுக்கு, ஆழ்ந்த உணர்வுரீதியான பிணைப்பு இல்லை, 54.8 சதவிகிதத்தினர் தாங்கள் தவறாக புரிந்துகொள்ளப்படுகிறோம் என்று கருதுகின்றனர். மேலும், 50.3 சதவிகிதத்தினர், தங்களுடைய உணர்வு ரீதியான தேவைகள் நிறைவேற்றப்படுவதில்லை என்றும் கருதுகின்றனர். இந்த நூலின் ஆசிரியரான அருட்தந்தை ஜான் அலெக்ஸாண்டர், எஸ்.டி.பி., டான் பாஸ்கோ சபை துறைவியாவார். அவர், பெல்ஜியத்தில் உள்ள கத்தோலிக்க பல்கலைக்கழகத்தில் தத்துவத் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். மேலும், நோபல் பரிசு பெற்ற பொருளாதார அறிஞர் அமர்த்தியா சென்னுடன் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இணைந்து பணியாற்றியவர். தற்போது அவர், சென்னை மறை மாவட்டத்தின் துணை மாகாண அதிபராக பணியாற்றி வருகிறார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் அருட்தந்தை முனவர் ஜான் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். பெல்ஜியம் லூவென் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டாக்டர். ஆண்டூன் வான்டெவெல்டே, ரோம் நகரத்துக்கான தெற்காசியாவின் பொது கவுன்சிலர் அருட்தந்தை பிஜு மைக்கேல், மற்றும் இந்து' குழுமத்தின் இயக்குநர் என். ராம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நாகர்கோவிலுக்கு வந்த ரயிலில் 5 கிலோ கஞ்சா சிக்கியது

## போலீசார் பறிமுதல் செய்தனர்



நாகர்கோவில், ஜூலை.2

கன்னியாகுமரியில் இருந்து அஸ்ஸாம் மாநிலம் திப்புருகருக்கு தினமும் ரயில் ஏற்பட்டு வருகிறது. பர்மார்க்கத்திலும் இந்த ரயில் இயக்கப்படுகிறது. அதன்படி நேற்று முன்தினம் இரவு கன்னியாகுமரிக்கு வந்த திப்ருகார் ரயில் பின்னர் பராமரிப்பு பணிக்காக நாகர்கோவில் உள்ள ரயில் நிலையத்தில் உள்ள யார்டு க்கு கொண்டு வரப்பட்டது. தொடர்ந்து அந்த ரயிலின் பெட்டிகளை சுத்தம் செய்யும் பணியில் ரயில்வே ஊழியர்கள் ஈடுபட்டனர்.

அப்போது முன்பதிவு செய்யப்படாத பெட்டியை சுத்தம் செய்த போது அதில் ஒரு பொட்டலம் கேட்பாரற்று கிடந்துள்ளது. இதனால் சந்தேகமடைந்த ஊழியர்கள் நாகர்கோவில் ரயில்வே போலீசாருக்கும், ரயில்வே பாதுகாப்பு படையினருக்கும் தகவல் கொடுத்தனர். அதன் பேரில் ரயில்வே பாதுகாப்பு படை இன்ஸ்பெக்டர் சுரேஷ் மற்றும் ரயில் போலீஸ் இன்ஸ்பெக்டர் கேத்தரின் சுஜாதா தலைமையில் போலீசார் யார்டு பகுதிக்கு விரைந்து சென்று ரயில் பெட்டியில் அந்த பையை பார்வையிட்டனர். பின்னர் அதனை சோதனை செய்ததில், 6 பார்சல் இருந்தது. அவற்றை பிரித்து பார்த்தபோது அதில் மொத்தம் ஐந்து கிலோ கஞ்சா அந்த பைகளில் இருந்து சிக்கியது.

அவற்றை பறிமுதல் செய்த போலீசார் நாகர்கோவில் ரயில்வே போலீஸ் நிலையம் கொண்டு வந்தனர். தொடர்ந்து போதைப்பொருள் தடுப்பு பிரிவு போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. பின்னர் கஞ்சா அவர்களிடம் கஞ்சா பார்சல் ஒப்படைக்கப்பட்டது.

இந்த கஞ்சாவை கடத்தி வந்தது யார்? என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். ரயில்கள் மூலம் கஞ்சா கடத்தப்படுவது தொடர்கதையாகியுள்ளது. கடந்த மாதத்தில் மட்டும் வட மாநிலங்களில் இருந்து வந்த ரயில்களில் கடத்திவரப்பட்ட 15 கிலோ கஞ்சா ரயில்வே போலீசார் பறிமுதல் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# முதலமைச்சர் டிராபி 2026 கோப்பைக்கான கிரிக்கெட் போட்டி



திருப்பூர்: ஜூலை02

கணியாம்பூண்டி பகுதியில் உள்ள Z3 கிரிக்கெட் மைதானத்தில் தமிழ்நாடு முதல்வர் ஜோசப் விஜய் பிறந்த நாளை முன்னிட்டு தமிழக வெற்றி கழகம் மற்றும் தமிழ்நாடு டென்னிஸ் கிரிக்கெட் அசோசியேஷன் இணைந்து நடத்தும் தளபதி டிராபி 2026 கோப்பைக்கான கிரிக்கெட் போட்டியினை திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பாலமுருகன் துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு தமிழக வெற்றி கழகம் மற்றும் தமிழ்நாடு டென்னிஸ் கிரிக்கெட் அசோசியேசன் இணைந்து நடத்தும் தளபதி டிராபி 2026 கோப்பைக்கான கிரிக்கெட் போட்டி யினை திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பாலமுருகன் துவக்கி வைத்தார். கிரிக்கெட் மைதானத்தில் தவெக கட்சி கொடியினை ஏற்றி வைத்தார். பின்னர் கிரிக்கெட் வீரர்களை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பாலமுருகனுக்கு போட்டியின் ஒருங்கிணைப்பாளர் ஷாபி, அறிமுகம் செய்து வைத்தார். மேலும் ஜூலை 1 முதல் 5 ந் தேதி வரை மாநில அளவில் நடைபெறும் இந்த கிரிக்கெட் போட்டியில் 24 மாவட்டங்களை சேர்ந்த அணியினர் பங்கு பெற்றுள்ளனர்.

இந்த கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு முதல் பரிசாக ரூ.10 லட்சம், வழங்கப்படவுள்ளது. இந்நிகழ்ச்சியில் தாவெக மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் குத்புதீன் மற்றும் தவெக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சுகாதார சீர்கேட்டால் சிக்கித் தவிக்கும் கிருஷ்ணகிரி அம்மா உணவகம்

## திடீரென பார்வையிட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் மற்றும் சமூக ஆர்வலர்



கிருஷ்ணகிரி:ஜூலை:2

கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களால் துவங்கப்பட்ட அம்மா உணவமானது தற்போது பொது மக்களின் வசதிக்காக தற்போதைய தமிழக முதல்வர் ஜோசப் விஜயின் உத்தரவிற்கிணங்க அம்மா உணவகத்தை மீண்டும் புதுப்பொலிவுடன் பொதுமக்களின் வசதிக்காக திறக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி அரசு பொது மருத்துவமனை முன்பாக உள்ள அம்மா உணவகத்தில் தினமும் காலை மாலை என 500க்கும் மேற்பட்டோர் இங்கு உணவு அருந்தி வருகின்றனர். இங்குள்ள அம்மா உணவகத்தில் சுகாதார சீர்கேடு, மற்றும் தரமற்ற உணவு வழங்குவதாக சமூக நுகர்வோர் நல பாதுகாப்பு சங்க மாநில பொதுச் செயலாளர் டாக்டர் சந்திர மோகனுக்கு தகவல் வந்ததை அடுத்து, இன்று கிருஷ்ணகிரி உணவு பாதுகாப்பு அலுவலர் ஜலகர் தலைமையில் சமூக ஆர்வலர் சந்திரமோகன் ஆகியோர் திடீரென பார்வையிட்டனர். அப்போது அம்மா உணவகத்தை சுற்றி சுகாதார சீர்கேடாக இருந்ததாகவும், அம்மா உணவகத்தில் உள்ள சமைக்க பயன்படுத்தும் பொருள்கள் அனைத்தும் உபயோகமற்ற நிலையில் சீர்கேடாக இருந்ததாகவும் மேலும் அங்குள்ள கதை வருது பெருச்சாளிகள் நுழைந்து உணவு பொருட்களை நாசம் செய்வதாகவும் குற்றம் சாட்டினார். மேலும் பல்வேறு விதமான பொதுமக்கள் உணவு அருந்த இங்கு வருவதாலும் எதிரே பொது மருத்துவமனையில் நோயாளிகளை பார்க்க வரும் பொதுமக்களும் இங்கு உணவு அருந்த வருவதாலும் அவர்கள் பயன்படுத்தும் தட்டில் இதற்கு மேல் வாழையிலை வைத்து உணவு பரிமாற வேண்டுமென, தமிழக முதல்வருக்கு சமூக ஆர்வலரும் சமூக நல பாதுகாப்பு மாநில பொதுச் செயலாளர் சந்திரமோகன் வேண்டுகோள் விடுத்தார். மேலும் இனிவரும் காலங்களில் தரமான உணவு வழங்கிட வேண்டும் எனவும் சுற்றுப்புறம் சுகாதாரம் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என அங்கு பணியில் உள்ள பெண்களிடம் வேண்டுகோள் விடுத்தார். இந்த நிகழ்வின்போது இளநிலை உதவியாளர் பெரியண்ணன், நகராட்சி அம்மா உணவக பொறுப்பாளர் நாகராஜ், சமூக நுகர்வோர் அமைப்பு சார்ந்த அன்புச்செல்வன், ஆகியோர் உடன் இருந்தனர்.

### தேனி மாவட்டத்தில்

# 9ஆவது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம்



தேனி, ஜூலை 2

தேனி மாவட்டம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம், வடபுதுப்பட்டி ஊராட்சி பின்னத்தேவன்பட்டியில் கால்நடை பராமரிப்புத்துறை மூலம் தேசிய கால்நடை நோய்த்தடுப்புத் திட்டத்தின் கீழ் 9ஆவது சுற்று கோமாரி நோய்தடுப்பூசி முகாம் துவக்கவிழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார் மற்றும் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் க.சபரிஐங்கரன் ஆகியோர் கலந்து கொண்டு, தடுப்பூசி முகாமினை தொடங்கி வைத்தார்கள்.

கால்நடைகளை தாக்கும் முக்கிய நோய்களில் ஒன்று கால் மற்றும் வாய் நோய் என்கிற கோமாரி நோய். இந்நோய் மிக கொடிய வைரஸ் கிருமிகளால் பரவுகிறது. எனவே, தேனி மாவட்டத்தில் உள்ள பசு மற்றும் எருமை இனங்களை கோமாரி நோயிலிருந்து காக்கும் வண்ணம் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் தேசிய கால்நடை நோய்த்தடுப்புத் திட்டத்தின் கீழ் கால் மற்றும் வாய் தடுப்பூசித் திட்ட 9ஆவது சுற்றின் கீழ் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் 31.07.2026 வரை 31 நாட்களுக்கு 54 மருத்துவ குழுக்கள் மூலம் மாவட்டத்தில் உள்ள சுமார் 1,02,450 கால்நடைகளுக்கு தடுப்பூசிப்பணி இலவசமாக மேற்கொள்ளப்பட உள்ளது. பாரத் பசுதான் செயலியில் கால்நடை குறித்த தரவுகளை பதிவேற்றம் செய்யவும், தடுப்பூசி போடப்பட்டதை உறுதிசெய்யவும், தங்களது கைபேசி எண்ணிற்கு வரும் OTP (கடவுச்சொல்)யை தடுப்பூசி குழுவினரிடம் தெரிவிக்க வேண்டும். இதன் மூலம் கால்நடைகளுக்கான வருங்கால நலத்திட்ட உதவிகளுக்கும் அரசின் சலுகைகளை நேரடியாக பெறுவதற்கும், கால்நடைகளுக்கு மானிய விலையில் காப்பீட்டுத்திட்டம் கிடைப்பதற்கும், தடுப்பூசி மற்றும் மருத்துவ சேவைகளை விரைந்து பெறுவதற்கும் கால்நடைகளின் ஆரோக்கியத்தை கண்காணிப்பதற்கும் பெரிதும் உதவியாக இருக்கும்.

# குமரி கலெக்டர் அலுவலகம் முன்பு மாற்றுத்திறனாளிகள் மறியல்



நாகர்கோவில், ஜூலை.2

மத்திய அரசு கொண்டுவந்துள்ள புதிய வேலைவாய்ப்பு சட்டத்தை எதிர்த்தும், 100 நாள் வேலை உறுதி திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த வலியுறுத்தியும் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் சங்கம் சார்பில் நேற்று நாகர்கோவிலில் உள்ள மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பு மறியல் போராட்டம் நடைபெற்றது.

மேலும் நேற்று ஜூலை 1ம் தேதியை கருப்பு தினமாக அறிவித்த மாற்றுத்திறனாளிகள் கருப்பு பட்டை அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்திற்கு தலைமை தாங்கிய மாவட்ட இணைச்செயலாளர் அருள் பேசுகையில், கிராமப்புற எளிய மக்களின் வாழ்வாதாரமாக இருந்த மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தை மத்திய அரசு படிப்படியாக முடக்கி வருகிறது. 2020 21 இல் 369 கோடி மனித வேலை நாட்களாக இருந்த அளவு, தற்போது 290 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. ஒரு கோடி வேலை நாட்களை ஒன்றிய அரசு வெட்டி சுருக்கி உள்ளது. என குற்றம் சாட்டினார். தற்போதைய புதிய சட்டத்தில் மாநில அரசுகள் 40 சதவீதம் செலுத்த வேண்டும் என்று கட்டாயம் இருப்பதால் வேலைவாய்ப்புகள் மேலும் குறைய வாய்ப்புள்ளதாக அவர்கள் கவலை தெரிவித்தனர்.

மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பு முற்றுகையிட்ட மாற்றுத்திறனாளிகள் தொடர்ந்து சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் நாகர்கோவில் கன்னியாகுமரி சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தொடர்ந்து 50 பேர் கைது செய்யப்பட்டனர். போராட்டத்தை யொட்டி மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் நூற்றுக்கணக்கான போலிசார் குவிக்கப்பட்டிருந்தனர். இந்த மறியல் போராட்டத்தில் மாற்றுத்திறனாளிகள், சங்க நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



### பொள்ளாச்சியில்

# அறத்தமிழன் அறக்கட்டளை துவக்கம்

கோவை ஜூலை: 2

பொள்ளாச்சியில் புதிதாக அறத்தமிழன் அறக்கட்டளை துவக்க விழா பொள்ளாச்சி லாரி உரிமையாளர்கள் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

துவக்க விழாவிற்கு அறக்கட்டளையின் தலைவர் மண்ணூர் ராமர் தலைமை வகித்தார். அறக்கட்டளையின் செயலாளர் பொறியாளர் ரவிச்சந்திரன் வரவேற்புரை வழங்கினார்.

தொடர்ந்து 'இமுட்' மருத்துவமனை சார்பில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மருத்துவர் பிரதீப், சரஸ்வதி தியாகராஜா கல்லூரியின் முதல்வர் முனைவர் வனிதாமணி, லாரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் முத்துக்குமார் ஆகியோர் கொண்டனர்.

பட்டாம்பூச்சி இயக்க ஒருங்கிணைப்பாளர் கவிஞர் முருகானந்தம், முதலுதவி சமூக நல அறக்கட்டளையின் நிறுவனர் முனைவர்.அபு .இக்பால், வளர்பிறை சமூக நல அறக்கட்டளை தலைவர் ஜெரினா பானு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மேலும் அறக்கட்டளையின் உறுப்பினர்கள் பொறியாளர் கவின் குமார், கோகுல், கண்ணன், சிவானந்தகுமார், காளிமுத்து, பொறியாளர் கதிர்வேல், மன்னூர் சரவணகுமார், பொறியாளர் செல்வகுமார், லேப் டெக்னீசியன் மாதேஷ், போட்டோ கிரியேஷன்ஸ் அஜித், நவநீதம், மலர்கொடி, நந்தினி, அமுதா, வெள்ளியங்கிரி, கீதா, பார்த்திபன், மேகலா, ஜெயசீலன், ஆறுமுகம் போன்ற அறக்கட்டளை உறுப்பினர்கள் இணைந்து பங்கேற்றனர்.

### துப்பாக்கி சூட்டில் பலியான விவசாயிகளுக்கு அஞ்சலி

# அனைத்து விவசாயிகளுக்கும் தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் அழைப்பு

சேலம் ஜூலை : 02

தமிழக விவசாயிகள் படும் இன்னல்களை கருத்தில் கொண்டு தமிழக விவசாயிகளை கடன் தொல்லை, மின்சார கட்டணம் உயர்வு போன்ற துயரங்களில் இருந்து காப்பாற்றுவதற்காக தமிழக விவசாயிகள் சங்கம் மறைந்த உழவர் பெருந்தலைவர் சி.நாராயணசாமி நாயுடு தலைமையில் உருவாக்கப்பட்டது. கடந்த பத்து ஆண்டுகளில் நடந்த போராட்டத்தில் தமிழக காவல்துறை நடத்திய துப்பாக்கி சூட்டில் 53 விவசாயிகள் இறந்துள்ளனர். 5.7.1972 அன்று நடைபெற்ற போராட்டத்தில் சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே உள்ள பெத்தநாயக்ன் பாளையம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் மீது தமிழக காவல்துறை துப்பாக்கி சூடு நடத்தியதில் 9 விவசாயிகள் உயிரிழந்தனர். சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே உள்ள பெத்தநாயக்ன்பாளையம் பேரூராட்சி அலுவலகம் அருகே உள்ள தூபி பகுதிக்கு தமிழகத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் வருகை தந்து பேரணியில் பங்கு கொண்டு துப்பாக்கி சூட்டில் பலியான தியாகிகளின் நினைவிடத்தில் வீரவணக்கம் செலுத்த விவசாயிகள் அனைவரும் திரளாக பங்கேற்கும் படி உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடுவின் தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் வேலுசாமி அழைக்கிறார்.

### கிருஷ்ணகிரியில்

# தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்கள் முன்னேற்ற சங்கத்தின் முத்து விழா மற்றும் கொடியேற்று விழா

## இணையவழி சான்றிதழ் வழங்க அரசு வசதிகளை செய்து தர தீர்மானம் நிறைவேற்றம்



கிருஷ்ணகிரி:ஜூலை:2,

கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்கள் முன்னேற்ற சங்கத்தின் முத்து விழா மற்றும் கொடியேற்று விழா வட்டத் தலைவர் ரமேஷ் தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில், சங்கத்தின் மாநிலத் தலைவர் பூபதி கலந்து கொண்டு சங்கக் கொடியினை ஏற்றி, விழாவைத் துவக்கி வைத்தார். தொடர்ந்து, பொதுச்செயலாளர் சாந்தராஜ் சங்க கல்வெட்டுப் பலகையைத் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் வட்டச் செயலாளர் முகமது சுபான் வரவேற்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர் பாலசுப்பிரமணியன், மாவட்ட பொருளாளர் பரமசிவம், மாவட்டத் துணைத் தலைவர் முருகன், மாவட்ட அமைப்புச் செயலாளர் சாமிதுரை, மாவட்ட பிரச்சார செயலாளர் முனீர், மாவட்ட இணைச் செயலாளர் கோபு, மாவட்ட துணைச் செயலாளர்கள் வெங்கடேசன், மகபூப் பாஷா, ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேளான் மாநிலச் செயலாளர் சுந்தரவடிவேல் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். மாநில பொதுச் செயலாளர் சுந்தர்ராஜ் விழா பேருரையும் மாநில பொருளாளர் செந்தில்குமார் வாழ்த்துறையும் வழங்கினார்கள். 8 வட்டங்களைச் சேர்ந்த சுமார் 120க்கும் மேற்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் கலந்துகொண்டு இணையவழி சான்றிதழ் வழங்க அரசு கட்டமைப்பு வசதிகளை செய்து தர வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றினர். அந்த தீர்மானத்தில் பொதுமக்களுக்கான சேவைகளை விரைவாக வழங்கும் நோக்கில், சான்றிதழ்களை 5 நாட்களுக்குள் வழங்க வேண்டும் என அரசு நிர்ணயித்துள்ளது. ஆனால், அதற்கான போதிய தொழில்நுட்பக் கட்டமைப்பை அரசு இன்னும் உருவாக்கித்தரவில்லை. சான்றிதழ்கள் வழங்க கிராம நிர்வாக அலுவலர்களுக்கு சிம்கார்டு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அதற்கான கையடக்கக் கணினி மற்றும் இணையவழிச் சேவைக்கான மாதாந்திர கட்டணங்களை வழங்கவில்லை. கடந்த 2016ஆம் ஆண்டு முதல் கிராம நிர்வாக அலுவலர்கள் தங்களது சொந்தப் பணத்திலிருந்தே அந்த கட்டணங்களை செலுத்தி வருகின்றனர். ஆகவே, புதிய அரசு உடனடியாக தலையிட்டு, இணையவழிச் சான்றிதழ்கள் வழங்கத் தேவையான கையடக்கக் கணினி மற்றும் இணையக் கட்டணச் செலவுத் தொகையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப்பிட்டு இருந்தனர். இந்த கூட்டத்தில் வருவாய்துறையை சேர்ந்த ஏராளமானவர்கள் கலந்துக் கொண்டனர். நிகழ்ச்சியின் இறுதியில் வட்ட பொருளாளர் வினோத்குமார் நன்றிஉரை ஆற்றினார்.

## சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற

# பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை தின விழா கொண்டாட்டம்



சேலம், ஜூலை 2

பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை சார்பாக சேலம் மண்டலத்தில் 20 வது தேசிய புள்ளியியல் தின விழா சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் ரவிக்குமார் தலைமையில் சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இந்தியாவின் நவீன புள்ளியியலின் தந்தையும் தலைசிறந்த புள்ளியியல் நிபுணருமான பேராசிரியர் பி.சி. மஹாலனோபிஸ் அவர்கள் புள்ளியியல் மற்றும் பொருளாதாரத் திட்டமிடலில் அவர் ஆற்றிய அரும் பணிகளை கௌரவிக்கும் விதமாக கடந்த 2007 ம் ஆண்டு முதல் அவரது பிறந்த நாளை இந்திய தேசிய புள்ளியியல் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. மேலும் சேலம் மண்டல புள்ளியல் இணை இயக்குனர் குப்புசாமி முன்னிலையில் 20 வது தேசிய புள்ளியியல் தின விழா கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டது. பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணி முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி விழாவை துவக்கி வைத்தார். சேலம் மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களில் பணிபுரியும் புள்ளியியல் துறை துணை இயக்குனர்கள் மற்றும் சேலம் மாவட்ட புள்ளியியல் துணை இயக்குனர் வினோதா வரவேற்புரை ஆற்றினார். விழாவில் புள்ளியியல் சார்ந்த ஆய்வறிக்கை, பேச்சுப்போட்டி, நாடகம் மற்றும் வினாடி, வினா ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டது. போட்டிகளில் சேலம் மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களில் பணிபுரியும் அலுவலர்கள்கலந்து கொண்டனர். விழாவில் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற வர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.



# கோவை வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

கோவை ஜூலை:02

தமிழ்நாடு மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் சரத்குமார் போதைப் பொருள் பயன்படுத்தியதாக சமூக வலைத்தளங்களில் வீடியோ ஒன்று வெளியாகி உள்ளது. இதனையடுத்து அமைச்சரை பதவிநீக்கம் செய்யக்கோரி துடியலூர்அருகே என்.ஜி.ஜி.ஓ காலனி பகுதியில் கோவை வடக்கு மாவட்ட தி.மு.க.மாணவரணி சார்பில் தடையை மீறி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டம் கோவை வடக்கு மாவட்ட தி.மு.க.செயலாளர்தொ.அ.ரவி லைமையிலும்,மாணவர் அணி அமைப்பாளர் அந்தோனிராஜ்,முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கார்த்திக் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.இதில் வடக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் மாவட்டதுணைசெயலாளர்அசோக்பாபுஆறுக்குட்டி,நகர செயலாளர்கள் அறிவரசு,குருபிரசாத்,முனுசாமி,அஸ்ரப் அலி,ஒன்றிய செயலாளர்கள் சுரேஷ்குமார், காந்தி, சார்பணியினர் மாணவரணி,மகளிர் அணி,இளைஞர் அணியினர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.பின்னர் ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்ட400,க்கும்மேற்பட்டவர்களை போலீசார் கைது செய்து தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைத்தனர்.

# குமரியில் 2 இடங்களில் அரசு பஸ்களில் நகை பறிப்பு; ஒரே நாளில் 8 பவுன் நகைகள் பறிப்பு

நாகர்கோவில், ஜூலை. 2

தக்கலை அருகேதிருவிதாங்கோடு பகுதியை சேர்ந்தவர் ராஜமணி மனைவி மரிய அஞ்சலி (66) நேற்று முன்தினம் காலையில் மயிலோட்டியிலிருந்து வேர் கிளம்பிக்கு அரசு பஸ்ஸில் சென்று கொண்டிருந்தார். இந்த பஸ்ஸில் பெண்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. பஸ் நிறுத்தத்தில் இறங்கும்போது மரிய அஞ்சலி கழுத்தில் கிடந்த 6 பவுன் தங்கச் செயினை காணவில்லை. பஸ்ஸில் கூட்டத்தை பயன்படுத்தி அவரது நகை பறிக்கப்பட்டுள்ளது தெரியவந்தது. இது குறித்து மரிய அஞ்சலி திருவட்டாறு காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதேபோல் தக்கலை அருகே கேரளபுரத்தை சேர்ந்த சங்கர் ஐயர் மனைவி ராஜேஸ்வரி (63) என்பவர் நேற்று பிற்பகல் நாகர்கோவில் இருந்து களியக்காவிளை அரசு பஸ்ஸில் ஏறி, தக்கலை பஸ் நிலையம் வந்து இறங்கினார். இந்த பஸ்ஸிலும் பெண்கள் கூட்டம் அதிகமாக இருந்துள்ளது. தக்கலை பஸ் நிலையத்தில் இறங்கி பார்த்தபோது, ராஜேஸ்வரி கருத்தில் கடந்த இரண்டரை பவுன் தங்கச் செயினை காணவில்லை. இது குறித்து ராஜேஸ்வரி தக்கலை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

குமரிமாவட்டத்தில்பஸ்களில்கூட்டத்தைபயன்படுத்தி வயதான பெண்களிடம் நகைகள் பறிக்கப்படும் சம்பவங்கள் தொடர் கதை ஆகியுள்ளது. இது தொடர்பாக பல்வேறு புகார்கள் குவிந்து வருகின்றன. ஏற்கனவே நாகர்கோவில் சரக பகுதியில் தொடர்ச்சியாக இரண்டு, மூன்று சம்பவங்கள் அரங்கேறி உள்ளன. மாவட்டத்தில் வெளி மாவட்டத்தில் இருந்து திருட்டு கும்பல் ஊடுருவி பயணிகள் போல் கைவரிசை காட்டி வருகிறார்கள். எனவே இதை கண்காணித்து காவல்துறை தீவிர நடவடிக்கைஎடுக்கவேண்டும்எனபொதுமக்கள்கேட்டுள்ளனர்.



சென்னை, பெரியமேடுவரசித்தி விநாயகர்கோயில்தெருவில்அமைந்துள்ளஅருள்மிகு ஸ்ரீ வரசித்தி விநாயகர் திருக்கோயில் ஜிர்ணோத்தாரண அஷ்டபந்தன திருக்குடமுழக்கு நன்னீராட்டு பெருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆலய செயல் அலுவலர் பாண்டியராஜன், குமரேசன், மேலும் புரசைவாக்கம் பாதாள பொன்னியம்மன் கோவில் செயல் அலுவலர் ராகேஷ், ரங்கநாதன் கோவில் மின்ட் செயல் அலுவலர் சந்தோஷ், பெரியபாளையத்தம்மன் கோவில் செயல் அலுவலர் சந்திரமோகன், ஆலய பொறுப்பாளர் பரந்தாமன் இவர்கள் இணைந்து கோயில் கும்பாபிஷேகத்தினை சிறப்பாக நடத்தினர், மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர், விழாவுக்கு வருகை தந்துசாமிதரிசனம்செய்தஅனைவருக்கும்தீர்த்தபிரசாதம்,அன்னதானம்வழங்கப்பட்டது.

# சிங்கப்பெண் அதிரடி படைக்கு ஈரோடு மாவட்ட மாணவிகள் பொது மக்கள் பாராட்டு



ஈரோடு ஜூலை 2

தமிழ்நாட்டில் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் சிங்கப் பெண் சிறப்பு அதிரடிப்படையை தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் தொடங்கி வைத்தார்.

ஈரோடு மாவட்டத்தில், மாநகர காவல் துறை எல்லையில் 2 சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படைகள் நியமிக்கப்பட்டு, 2 குழுக்களாக சுழற்சி முறையில் மாவட்டம் முழுவதும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஒரு சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படையில், 1 பெண் காவல் உதவி ஆய்வாளர் தலைமையில் 2 பெண் காவலர்கள் மற்றும் 1 ஓட்டுநர் காவலர் 4 காவலர்கள் தனி காவல் வாகனத்தில் ரோந்து பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

மேற்படி சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படைப் படையினர் ஈரோடு மாநகர காவல் துறை எல்லைகளிலுள்ள கல்லூரிகள், பள்ளிகள், பேருந்துநிலையங்கள்நிறுத்தங்கள். குற்றங்கள் நடைபெற வாய்ப்புள்ள பகுதிகள் போன்ற இடங்களில் ரோந்து பணி மேற்கொண்டு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களிலிருந்து பொது மக்களை பாதுகாக்கும் பணியினை மேற்கொள்வதோடு காவல் உதவி செயலி காவல் கட்டுப்பாட்டு

அறை உதவி எண். பெண்கள் பாதுகாப்பு உதவி எண், குழந்தைகள் பாதுகாப்பு உதவி எண் ஆகியவை மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறார்கள்.

ஈரோடு மாவட்டம் சிங்கபெண் சிறப்பு அதிரடிப்படையில் பணியாற்றும் காவல் உதவி ஆய்வாளர்கள் தெரிவிக்கும்போது,

ஈரோடு மாவட்டத்திற்கு சிங்க பெண் சிறப்பு அதிரடிப்படையில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறோம். எங்களுடன் 2 பெண் காவலர்கள் மற்றும் 1 வாகன ஓட்டுநர்கள் தலைமையில் பெண்கள் பாதுகாப்பு குறித்து மாவட்டத்தில் உள்ள அனைத்து இடங்களுக்குச் சென்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். காலை 7 மணி முதல் மதியம் 2 மணி வரையிலும், மதியம் 2 மணி முதல் இரவு 12 மணி வரை இரண்டு ஷிப்ட் முறையில் பணியாற்றி வருகின்றனர். சிங்க பெண் சிறப்பு அதிரடி படை திட்டம் பொதுமக்கள் மற்றும் பெண்களிடையே மிகுந்த வரவேற்பு பெற்றுள்ளது. மேலும் எங்களது சிங்கப்பெண் படையினர் மாவட்டத்தில் உள்ள கல்லூரிகள், பள்ளிகள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்களுக்கு சென்று பெண்கள் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து பெண்களிடையே விழிப்புணர்வு செய்து வருகிறோம்.

பெண்கள் எந்த பிரச்சினை வந்தாலும் தைரியமாக எதிர்கொள்ள

தங்களிடம் தைரியத்துடன் எடுத்துச் சொல்ல வேண்டும். பெண்களுக்கு எதிரான குற்றங்கள் இணைய வழி மோசடிகள், சமூக வலைத்தளங்களில் பாதுகாப்பான பயன்பாடு அவசர கால உதவி எண்கள் (1091) காவல்துறையின் பாதுகாப்பு சேவைகள்வாயிலாக விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டு வருகிறோம். இத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம் என்று கூறினர்.

ஈரோடு மாவட்டத்தில் பணிக்கு செல்லும் பெண்கள் மற்றும் பள்ளிகள், கல்லூரிகளுக்கு செல்லும் பெண்கள் பிள்ளைகள் அனைவரும் கூறும்போ...

## விளாத்திகுளம் அருகே

# ஒரே ஒரு பள்ளி மாணவிக்கு இரண்டு ஆசிரியர்கள் பொதுமக்கள் குற்றச்சாட்டு



விளாத்திகுளம் ஜூலை 02.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள புதுப்பட்டி கிராமத்தில் . TN.D.T.A எனும் அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளி செயல்பட்டு வருகிறது, இந்தப் பள்ளியில் 5ம் வகுப்பு படிக்கும் ஒரே ஒரு மாணவி மட்டும் இருப்பதாகவும், மாணவிக்கு இரண்டு ஆசிரியர்கள் இருப்பதாகவும், அவ்வாறு உள்ள ஆசிரியர்கள் இருவரும் மாணவிக்கு முறையாக கல்வி கற்பிப்பது இல்லை என்று அக்கிராம மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டினர்.

இதனைத்தொடர்ந்து செய்தியாளர்கள் அந்தப்பள்ளிக்கு சென்று செய்தி செய்தி சேகரிக்க சென்றபோது, பள்ளியில் இருந்த ஒரே மாணவி பள்ளியின் நடுப்பகுதியில் அமைதியாக அமர்ந்திருந்தார், பள்ளியின் தலைமையாசிரியர் மேரி பள்ளியின்

தெற்கு பகுதியிலும் ஆசிரியர் ஜீவா பள்ளியின் வடக்கு பகுதியிலும், அமைதியாக அமந்திருந்தனர், இதனை அடுத்து பள்ளியின் தலைமை ஆசிரியர் பள்ளியின் உள்ளே செய்தியாளர்கள் வராதீர்கள், எதுவாக இருந்தாலும் பள்ளி நிர்வாகத்திடம் பேசிக்கொள்ளுங்கள், என்று தலைமையாசிரியர் மேரி செய்தியாளர்களிடம் கூறினார், அதற்கு செய்தியாளர்களோ தங்களுக்கு பள்ளி நிர்வாகம் ஊதியம் தருகிறதா? இல்ல அரசு தருகிறதா? என்று கேட்டவுடன், தலைமை ஆசிரியர் மேரியும் ஆசிரியர் ஜீவாவும், செய்தியாளர்கள் வீடியோ எடுப்பதை பார்த்து பள்ளி அறையில் இருந்து இரு ஆசிரியர்களும் வெளியே சென்றனர்.

அந்தப்பள்ளியின் தலைமை ஆசிரியர் மேரிக்கு மாதம் 1 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் சம்பளமும், ஆசிரியர் ஜீவாவிற்கு மாசம் 80 ஆயிரம் சம்பளமும், அந்தப்பள்ளியில் உள்ள சமையல் உதவியாளர் ஒருவருக்கு 7000 சம்பளமும், மேலும் அந்தப் பள்ளிக்கு மின்சார சேவை, காலை உணவுதிட்டம்,

மதியஉணவு திட்டம், சமையல் எரிவாயு, LED TV உள்ளிட்ட அரசு சார்பில் பல்வேறு உதவிகள் பள்ளிக்கு வழங்கப்பட்டாலும், பள்ளியில் உள்ள ஆசிரியர்கள் ஏதோ கடமைக்கு வந்தோம், வீட்டுக்கு சென்றோம் என்ற நிலையில் மாணவிகளுக்கு முறையாக பாடம் கற்பிப்பதே இல்லை என்றும் பள்ளியில் உள்ள கரும்பலகையில் உள்ள தேதியை மாற்றக்கூட அவர்கள் இருவருக்கும் நேரமில்லை என்றும் புதுப்பட்டி கிராம மக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். கடந்தாண்டு இந்த பள்ளியில் 5 மாணவர்கள் படித்து வந்த நிலையில் தற்போது ஒரு மாணவி மட்டுமே படித்து வருகிறார், எனவே அரசு பள்ளி மாணவர்கள் சேர்க்கையை அதிகரிக்க கல்வி அலுவலர்களும் ஆசிரியர்களும் முன்வர வேண்டும் என்று கிராம மக்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தென்காசி மாவட்டத்தில்

# தேசிய கால்நடை நோய் தடுப்பு திட்டம் மூலம் கால்நடைகளுக்கு 9 வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம்



தென்காசி,ஜூலை.2

தென்காசி மாவட்டம் தென்காசி ஊராட்சி ஒன்றியம் ஆயிரப்பேரி ஊராட்சி புதூர் கிராமத்தில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் தேசிய கால்நடை நோய் தடுப்பு திட்டம் மூலம் கால்நடைகளுக்கு 9 வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாமினை மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன் துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட வருவாய் அலுவலர் தெரிவிக்கையில்

தென்காசி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் தேசிய கால்நடை நோய் தடுப்பு திட்டம் மூலம் கால்நடைகளுக்கு 9 வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம் இன்றைய தினம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. கோமாரி நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு காய்ச்சல் ஏற்பட்டு சினை மாடுகளில் கருச்சிதைவு ஏற்படலாம். பாதிக்கப்பட்ட மாடுகளில் மலட்டுத்தன்மையும், இரத்த சோகையும் ஏற்படும். பாதிக்கப்பட்ட பசுக்களில் கன்றுகளை பால் குடிக்க விடக்கூடாது அவ்வாறு குடித்தால் கன்றுகள் உடனடியாக இறக்க நேரிடும். சிறந்த பராமரிப்பும் தடுப்பூசி போடுவதும் இந்நோயினை தடுக்க உகந்த வழியாகும்

தென்காசி மாவட்டத்தில் 126320 பசு இனங்களுக்கும் 6892 எருமை இனங்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தென்காசி மாவட்டத்திலுள்ள 61 கால்நடை மருந்தகங்கள் மற்றும் 3 கால்நடை மருத்துவமனைகளில் உள்ள கால்நடை மருத்துவர்கள், கால்நடை உதவி மருத்துவர், கால்நடை ஆய்வாளர்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் கொண்ட 53 குழுக்கள்அமைக்கப்பட்டு 01.07.2026 முதல் 31..07..2026 வரை 31 நாட்களுக்கு தடுப்பூசிப்பணி இலவசமாக மேற்கொள்ளப்பட உள்ளது.

இத்தடுப்பூசிப்பணி நான்கு மாதத்திற்கு மேல் உள்ள கன்றுகளுக்கும் மற்றும் நிறை மாத சினை இல்லாத மாடுகளுக்கும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை போடப்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கு தங்களது கிராமத்தில் எந்த நாட்களில் தடுப்பூசி பணி நடைபெறும் என்ற விவரம் முன்கூட்டியே சம்மந்தப்பட்ட கால்நடை மருந்தகத்தால் அக்கிராமத்திற்கு தெரிவிக்கப்படும் அல்லது பொது மக்கள் தங்கள் பகுதி கால்நடை மருத்துவமனை கால்நடை மருந்தகம் மற்றும் கால்நடை கிளை நிலையத்தை தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். தொடர்ந்து இன்றைய தினம் 256 தடுப்பூசி பணி மேற்கொள்ளப்பட்ட கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு சுகாதார அட்டை மற்றும் 42 கால்நடை உரிமையாளர்களுக்கு தாது உப்புக்கள் வழங்கி தடுப்பூசி போடப்பட்டது. ஆகவே கோமாரி நோய் தடுப்பூசி போடும் நாளில் விவசாயிகள் கால்நடை பராமரிப்புத்துறையினருக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி தவறாது தடுப்பூசி போட்டு கொள்ள வேண்டும் என மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் மரு. கோவில்ராஜா, உதவி இயக்குநர் மரு. தெரசா மேரி, கால்நடை உதவி மருத்துவர்கள் மரு.முத்துமாரி (தென்காசி), மரு. விஷ்ணு ராகவேந்திரன்(வல்லம்), கால்நடை ஆய்வாளர்கள் பழனிசாமி, அருண் குமார், முத்துலெட்சுமி மற்றும் பராமரிப்பு உதவியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




## காவேரிப்பட்டினம் அருகே உள்ள

# ஜெகதாப் அரசு உயர்நிலைப் பள்ளியில் குழந்தை கடத்தல் தொடர்பான விழிப்புணர் கருத்தரங்கம்

கிருஷ்ணகிரி, ஜூலை 2

காவேரிப்பட்டினம் அருகே உள்ள ஜெகதாப்அரசுஉயர்நிலைப்பள்ளியில்குழந்தை கடத்தல் தொடர்பான விழிப்புணர் கருத்தரங்கம் நடைபெற்றது ,

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப் பட்டினம் அருகே உள்ள ஜெகதாப் அரசு உயர்நிலைப் பள்ளியில் கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகம் மற்றும் கிராமிய பெண்கள் அறக்கட்டளையும் இணைந்து குழந்தை கடத்தல் தடுப்பு தினம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது,

பள்ளியின் தலைமை ஆசிரியர் நந்தகுமார்தலைமையில் நடைபெற்ற இந்த கருத்தரங்கத்திற்கு சிறப்பு அழைப்பாளராக மாவட்ட சமூகநல அலுவலர் சக்தி சுபாஷினி கலந்துக் கொண்டு குழந்தைகள் கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது குறித்ததும், பாதுகாப்பான முறையில் குழந்தைகளை எப்படி வளர்ப்பது மட்டுமன்றி குழந்தைகள் கடத்தலை எப்படி தடுப்பது குறித்து கிராம மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தினார்

மேலும் இந்த விழிப்புணர்வு கருத்தரங்கின் போது உத்தர குமார் வரவேற்புரை ஆற்றினார், குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் கஸ்தூரி, குழந்தைகள் நல குழு உறுப்பினர் மோகன், மாவட்ட குழந்தைகள் உரிமை திட்ட ஒருங்கினைப்பாளர் செந்தில் ராஜா உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டு குழந்தை கடத்தல் தடுப்பு குறித்து உறிதி பொழியும் எடுத்துக் கொண்டனர். கூட்டம் முடிவில் வரலட்சுமி நன்றியுரை ஆற்றினார்



வேலூர் மாவட்டம் வேலூர் மாநகராட்சி விருப்பாட்சிபுரம்பேருந்துபயணியர் நிழற்குடம்அருகில் புதிய ஸ்ரீ.முருகன்.டீ ஸ்டால் மற்றும் டிபன் சென்டர்திறப்பு விழா மிக கோலகாலமாக நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக வேலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.மு.வினோத் கண்ணன் கலந்து கொண்டு புதியகடை யை திறந்து வைத்தார்இதில் த.வெ.ககட்சியின் இணை செயலாளர். சீனிவாசன்.எஸ் நவீன். உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் திறப்பு விழாவிற்கு வருகை புரிந்த சிறப்பு அழைப்பாளர்களுக்குகடைஉரிமையாளர்குடும்பத்தினர்சால்வைஅணிவித்துமரியாதை செலுத்திவரவேற்றனர்.மேலும் கடை திறப்பு விழா முன்னிட்டு ரூபாய் 200 க்கு மேல்.டீ மற்றும் டிபன் வாங்கும்சுமார் 50 நபர்களுக்குவெள்ளி நாணயம் குலுக்கள் முறையில்வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது

தினதமிழ்





# படந்தாலு மூட்டில் நாட்டு வைத்திய சங்கம் சார்பில் குரு பூர்ணிமா விழா

களியக்காவிளை, ஜுலை, 2

அனுக்கிரக சித்த வர்ம மற்றும் தேவ தாசன் வைத்தியர் சித்த வர்ம ரிசர்ச் பவுண்டேஷன் இணைந்து நடத்திய சிந் தார்மணி நாட்டு வைத்திய சங்கமம் மற் றும் 23வது குரு பூர்ணிமா விழா படந்தா லுமூடு ஜோதி ஜீவபூர்ண செண்டரில் நடந்தது. நிகழ்ச்சியில் டாக்டர் சுரேஷ் குமார் தலைமை வகித்தார். மாணவிகள் தமிழ் தாய் வாழ்த்து பாடினர். பிரின்ஸ் வைத்தியர் வரவேறார். தொடர்ந்து குருக்கன்மார்கள் திரு உருவ படத்திற்கு முன் ஜோதி ஏற்றப்பட்டது.. குரு வணக் கம் நடந்தது. வெள்ளிமலை விவேகா னந்த ஆஸ்ரம சுவாமி சைதன்யானந்த ஜி மஹாராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

மெதுகும்மல் ஊராட்சி முன்னாள் தலைவர்சசிகுமார், பாறசாலை ஊராட்சி தலைவி உஷா குமாரி, பேச்சிப்பாறை மூலிகை ஆராய்ட்சி நிறுவன முனைவர் ரிச்சார்டு கென்னடி, மூலச்சல் டாக்டர் ராஜேந்திரன், ரிச்சார்டு குருக்கள் ஹரிஷ் வைத்தியர் உள்ளிட்டோர் பேசினர். பாற சாலை பிளாக் பஞ் துணை தலைவர் அருன் மூலிகை கண்காட்சியை திறந்து வைத்தார்.

தொடர்ந்து இலவச மருத்துவ முகாம், மூலிகை கண்காட்சி,யோகா,களரி விளையட்டு, புத்தக வெளியிட்டு உள் ளிட்டவைகள் நடந்தது.

விழாவில் சிவராமன் ஆசான் நினைவு சித்த மர்ம குருகுலத்தின் ஆண்டு விழா வும், குருபூர்ணிமா விழா, 2025–2026 கல்வியாண்டில் குருகுலப் பயிற்சியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வைத் திய ஜோதி விருது, களரி ஆசான்மார்க ளுக்கு அவார்டு, சமூகத்தில் சேவை செய் யும் சமூக சேவகர்களுக்கு கர்ம சிரேஸ்ட அவார்டு உள்ளிட்ட அவார்டுகள், ,சான் றிதழ்கள், விருதுகளையும் வழங்கப்பட் டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் மேக்கோடு சுதா சசீந்திரன் சித்த மருத்துவ கல்லூரி மாணவர்கள், பேராசிரியர்கள், தமிழ கம்,, கேரளா, கர்நாடகா, ராஜஸ்தான், பாண்டிச்சேரி உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து களரி ஆசான்மார்கள் கலந்து கொ ண ்ட ன ர்

ஏற்பாடுகளை படந்தாலுமூடு அனுக் கிரக சித்த வர்ம வைத்திய சாலை டாக்டர் சுரேஷ் குமார் தலைமையில் நிர்வாக குழுவினர் செய்திருந்தனர்.

## தமிழ்நாடு முதல்வர் விஜய் கையால் ஆணை பெற

# 4 மாதமாக காத்திருக்கும் அரசால் தேர்வு செய்யப்பட்ட 745 மருத்துவர்கள்



திருப்பத்தூர்: ஜூலை02

அரசு மருத்துவ மனைகளில் பணிபுரிய மருத்துவ பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு பெற்ற 1100 மருத்துவர்க ளில் மதிப்பெண் அடிப்படையில் முதல் 320 மருத்துவர்களுக்கு சென்ற மார்ச் 10 ஆம் தேதி கலந்தாய்வு மூலம் பணியிடம் தேர்வுசெய்து பணி ஆணை வழங்கப்பட் டது. மீதமுள்ள 780 மருத்துவர்களுக்கு தேர்தல் நடத்தை விதிகளை காரணம் காட்டி பணி ஆணை வழங்கவில்லை. புதிய ஆட்சி வந்த பிறகு, மீதமுள்ளவர்க ளுக்கு பணி ஆணை வழங்க கோரிக்கை முன்வைக்கப்பட்டதன் அடிப்படையில் ஜூன்4 ஆம் நாள் 395 மருத்துவர்களுக்கு மட்டும் அழைப்பு விடுவிக்கப்பட்டு கலந்தாய்வு நடத்தி பணியிடத்தை தேர்வு செய்தனர். அதன் பிறகு 27.6.2026 அன்று 350 மருத்துவர்கள் கலந்தாய்வு மூலம் பணியிடத்தை தேர்வு செய்தனர். ஆனால் பணியில் சேர பணிஆணை வழங்கவில்லை. அரசு மருத்துவர் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகும் பணி ஆணை வழங்காமல் தாமதமாவ தால் வேறுபணிக்கும் செல்லமுடியாமல் 745 மருத்துவர்கள் 4 மாதமாக மன உளைச்சலில் உள்ளனர்.

இதுகுறித்து சென்னை பொது சுகாதா ரத்துறை இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டபோது முதல்வர் விஜய், மேற்கண்ட 745 மருத்துவர்களுக் கும் நேரடியாக பணி ஆணை வழங்க உள்ளதால். முதல்வர் விஜய்யின் நேரம் மற்றும் நாள் ஒதுக்கீடு கிடைத்த பிறகு 745 மருத்துவர்களுக்கு பணி ஆணை வழங்கப்படும் என்ற தகவலை தெரிவித் தனர். மருத்துவப் பணியாளர் தேர்வா ணையம் மூலம் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்ற பிறகு கடந்த நான்கு மாதமாக ஆணை பெறாமல் உள்ளனர். பணி ஆணை வழங்கப்படாமல் உள்ள 745 மருத்துவர்களுக்கு இனியும் தாமதிக்கா மல் முதல்வர் விஜய், உடனே பணி ஆணை வழங்கவேண்டும் என்று தமிழக முதல்வர் விஜய் அவர்களுக்கு மேற் கண்ட பணி ஆணை பெறாத மருத்துவர் கள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக பொறுப்பேற்ற பின்னர் மாணிக்கம் தாகூர் முதல் நாளாக சத்தியமூர்த்தி பவன் வந்தார் அங்கு ராஜீவ் காந்தி அரங்கத்தில் காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களை சந்தித்து அவர் வாழ்த்து பெற்றுக் கொண்டார். சத்தியமூர்த்தி பவனில் நடைபெற்ற பதவி ஏற்பு விழாவில்தமிழக காங்கிரஸ் கமிட்டியின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாணிக்கம் தாகூர், அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவித்த திருப்பூர் மாநகர் மாவட்ட முன்னாள் செயலாளர் MP.சாதிக், இந்நிகழ்ச்சியில் திருவள்ளுவர் பாராளுமன்ற உறுப்பினர் சசி காந்த் செந்தில், பிரவீன் சக்கரவர்த்திMP, சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேஷ்குமார், முன்னாள் தலைவர்கள் அனைவரையும் சந்தித்தார்..

# மா விவசாயிகள் அவசர ஆலோசனைக் கூட்டம்

## அகில இந்திய மாங்கனி கண்காட்சியை புறக்கணிக்க முடிவு



கிருஷ்ணகிரி, ஜூலை 2

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த பெரிய ஜோகிப்பட்டியில் மா விவசாயிகளின் அவசர ஆலோசனைக் கூட்டம், விவசாய சங்கத் தலைவர் சௌந்தரராஜன் தலைமையில் நடை பெற்றது. இதில், ஊத்தங்கரை ஒன்றியத் தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மா விவசாயிகள் திரளாக கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகள் குறித்து ஆலோ சனை நடத்தினர்.

கூட்டத்தில் மா விவசாயிகளின் வாழ் வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் பல முக்கிய தீர்மானங்கள் ஒருமனதாக நிறை வேற்றப்பட்டன. அவற்றில் முக்கியமாக, ஆண்டுதோறும் கிருஷ்ண கிரியில் நடைபெறும் அகில இந்திய மாங்கனி கண்காட்சியை முற்றிலுமாக புறக்கணிக்க முடிவு செய்யப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 38 ஆயிரம் ஹெக்டேருக்கும் அதிகமான பரப்பளவில் மா சாகுபடி நடைபெற்று வருகிறது. ஆண்டுதோறும் பல நூறு கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் மா விவசாயிகள்,

தற்போது அரசின் போதிய ஆதரவு இல்லாததால் கடுமையான நஷ்டத்தை சந்தித்து வருவதாக கூட்டத்தில் குற்றம் சாட்டப்பட்டது. பாதிக்கப்பட்ட மா விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.22,500 வீதம் நிவார ணம் வழங்க வேண்டும் என்றும், ஊத் தங்கரை ஒன்றியத்தில் அரசு மாங்கூழ் தொழிற்சாலை அமைக்க வேண்டும் என் றும் அரசை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும், விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகளுக்கு அரசு விரைந்து நடவ டிக்கை எடுக்காவிட்டால், அடுத்த கட்ட மாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பிரம் மாண்ட சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று கூட்டத்தில் பங் கேற்ற விவசாயிகள் எச்சரிக்கை விடுத் தனர்.



# ஆற்றூர் நர்சிங் கல்லூரியில் ரத்த தான முகாம்

திருவட்டாறு, ஜூலை. 2

திருவட்டாறு அருகே ஆற்றூர் ஒயிட் நினைவு நர்சிங் கல்லூரி மற்றும் பத்மநா பபுரம் அரசு தலைமை மருத்துவமனை இணைந்து நடத்திய இரத்த தான முகாம் நடைப்பெற்றது. இந்த முகாமுக்கு ஒயிட் நினைவு கல்வி குழுமத்தின் தலைவர் டாக்டர்லீலாபாய்ராஜேந்திரன்தலைமை வகித்தார். நர்சிங் கல்லூரி முதல்வர் டாக் டர் சோயி சோபனா அலக்ஸாண்டர் மற் றும் மருத்துவர் கோலப்பன் ஆகியோர் முகாமை தொடங்கி வைத்தனர்.

முகாமின் தொடக்கமாக இரத்ததா னம் செய்வதன் முக்கியத்துவம் மற்றும் அதனால் ஏற்படும் நன்மைகளை குறித்து இரத்த வங்கி ஒருங்கிணைப்பாளர் ராஜன் சிறப்புரையாற்றினார். முகாமை முன்னிட்டு 58 நர்சிங் கல்லூரி மாணவ, மாணவிகள் ஆர்வமுடன் முன்வந்து தங் களது இரத்தத்தை தானமாக வழங்கி னர்.

முகாமின் முடிவில் மருத்துவர் குருதி கொடையாளர் பாராட்டு சான்றிதழ் களை இரத்த தானம் செய்த மாணவர்க ளுக்கு வழங்கினார்.

தானமாக பெறப்பட்ட இரத்தம் அனைத்தும் அரசு இரத்த வங்கிக்கு பாது காப்பாக அனுப்பி வைக்கப்பட்டது.



## திருவட்டாறு

# ஆதிகேசவப்பெருமாள் கோவிலில் உடைந்த யாளி சிலை பழமை மாறாமல் புதுப்பிப்பு

திருவட்டறு, ஜூலை.2

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற திருவட்டாறு ஆதிகேச வப்பெருமா:ள் கோவில் இந்தியாவில் உள்ள 108 வைணவ திருத்தலங்களில் ஒன்றாகும். இந்த கோவிலைச்சுற்றி மிகப்பழமையான சிற் பங்கள் சிலைகள் காணப்படுகிறது. உத யமார்த்தாண்ட மண்டபத்தின் எதிரில் ரதி, மன்மதன் சிலைகள் காணப்படுகி றது. கோவில் ஸ்ரீபலி மண்டபத்தில் வேணுகோபாலன், மத்தளம் கொட்டும் ஆண், சதுர் தாண்டவ நிலையில் மத்த ளம் அடிக்கும் பெண், யாளி உட்பட பல சிற்பங்கள் உள்ளது.

இந்நிலையில் கடந்த ஆண்டு டிசம் பர் மாதம் கோவிலில் உள்ள ஸ்ரீபலிமண்டபத்தில் உள்ள 10 அடி உயர, ஐந்தரை அடி அகலம் கொண்ட யாளி சிலையின் துதிக்கை மற்றும் கீழ் பகுதியில் உள்ள பூதகணத்தின் சிற்பம் ஆகியன உடைந்து விழுந்துள்ளது. இது குறித்து தகவல் அறிந்த இந்து சமய அற நிலையத்துறையின் மண்டல மாநில வல்லுநர் குழுவினர் கோவிலுக்கு வந்து உடைந்த சிலையை பழமை மாறாமல் புதுப்பிப்பது குறித்து ஆய்வு மேற் கொண்டு சிலைக்யை சீரமைக்க தீர்மா னித்தனர்.

பின்னர் அறநிலையத்துறை இணை ஆணையர் ஜான்சி ராணியின் உத்தரவுப் படி அறநிலையத்துறை பொறியாளர் ராஜ்குமார், கோவில் மேலாளர் மோகன் குமார் முன்னிலையில் தூத்துக்குடி ,திரு நெல்வேலி மண்டல தொல்லியல் வல் லுநர் மணி தலைமையில் ஸ்தபதிகள் கன்னியப்பன், கமலக்கண்ணன் மற்றும் குழுவினர் கடந்த 3 நாட்களாக யாளி சிலையை சீரமைக்கும்பணியில் ஈடு பட்டனர். இதற்காக கூட்டு கலவைகள் பயனபடுத்தப்பட்டது. தற்போது தற் போது யாளி சிலை உடைவதற்கு முன்பி ருந்தது போல் தத்ரூபமாக காட்சி தருகி றது. சிலையை பழமை மாறாமல் சீரமைத்த அறநிலையத்துறைக்கு பக்தர் கள் பாராட்டுகளைத்தெரிவித்தனர்.

# சுசீந்திரம் தாணு மாலய சுவாமி கோவில் உண்டியல் திறந்து எண்ணும் பணிகள்

சுசீந்திரம், ஜூலை 2

சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோவிலில் பக்தர்கள் காணிக்கை செலுத்துவதற்கு வசதியாக 12 உண்டியல்கள் வைக்கப்பட்டுள்ளன அந்த உண்டியல்களை மூன்று மாதத்திற்கு ஒரு முறை திறந்து எண்ணப்படுவது வழக்கம் அதுபோல நேற்று காலை கோவில்களின் இணை ஆணையர் ஜான்சி ராணி தலைமையில் துணை ஆணையர் கவிதா ஆய்வாளர் சுபா கண்காணிப்பாளர் ஜெயசுதா கோவில் மேலாளர் ஆறுமுகதரன் கணக்கர் கண்ணன் முன்னிலையில் கோவில் ஊழியர்கள் சுய உதவி குழு பெண்கள் 12 உண்டியல்களும் திறந்து எண்ணினார் உண்டில் காணிக்கை வருவாயாக 25 லட்சத்தி 65 ஆயிரத்து 712 ரூபாயும் 2 கிராம் தங்கமும் 38 கிராம் வெள்ளியும் வெளிநாட்டு நாணயங்களும் கிடைத்துள்ளது

## தென் தாமரை குளம் அருகே

# தனியார் பள்ளி வாகனம் அரசு பஸ் மீது மோதி விபத்து

தென்தாமரைகுளம்., ஜூலை. 2

கன்னியாகுமாரி பகுதியில் உள்ள தனியார் சி. பி. எஸ். இ பள்ளியில் படிக்கும் பல்வேறு பகுதிகளை சேர்ந்த மாணவ, மாணவியர்கள் மற்றும் அங்கு பணிபுரியும் ஆசிரியர்களை பள்ளிக்கு அழைத்து வருவதற்காக பள்ளி நிர்வாகம் சார்பாக வாகன வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி நேற்று அந்தப் பள்ளிக்கு சொந்தமான பள்ளி வாகனம் ஒன்று மணக்குடி பகுதியில் இருந்து மாணவ, மாணவிகளை ஏற்றி கொண்டு கன்னியாகுமரி நோக்கி வந்து கொண்டிருந்தது அப் போது தென்தாமரைகுளம் அருகே உள்ள கோவில்விளை பகுதியில் பஸ் நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த அரசு பஸ் சின் பின்னால் மோதி விபத்துக்குள்ளானது. .இதில் பள்ளி வாகனத்தில் மாணவ, மாணவியர்கள், டிரைவர், உட்பட 34 பேர் பயணித்த நிலையில் அதிர்ஷ்டவசமாக லேசான காயங்களுடன் அனைவரும் உயிர் தப்பினர். பள்ளி வாகனம் முன்பகுதி முற்றிலும் சேதம் அடைந்தது. இந்த விபத்தை பார்த்து அதிர்ச்சி அடைந்த அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் உடனடியாக வாகனத்துக்குள் சிக்கிய பள்ளி மாணவ மாணவிகளை மீட்டு கொட்டாரம் பகுதியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்..அங்கு காயம் அடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.இந்த விபத்து குறித்த தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த தென்தாமரைகுளம் போலீசார் விசாரணை நடத்தினர் . மேலும் இந்த விபத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் , போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது. முற்றிலும் சேதமடைந்த பள்ளி வாகனத்தை மீட்பு வாகனத்தைக் கொண்டு வந்து தென்தாமரை குளம் போலீசார் அப்புறப்படுத்தினர்.

## தென்தாமரைகுளம் அருகே

# ஆக்கர் கடையில் தீ விபத்து



தென்தாமரைகுளம்., ஜூலை 2

தென்தாமரைகுளம் அருகே உள்ள கீழ மணக்குடியில் உள்ள பழைய ஆக்கர் கடை யில் நேற்று மதியம் கடை யின் உரிமையாளர் வீட்டிற்கு சாப்பிட சென்றபோது திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.காற்றின் வேகம் அதிக மாக இருந்ததால் தீ மள மளவென பரவி கொழுந்து விட்டு எரிய தொடங்கியுள்ளது. இதனால் அந்த பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சியளித்துள்ளது. இதைப் பார்த்த அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் உடனே கன்னியாகுமரி தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் கொடுத்துள்ளனர். இதையடுத்து தீயணைப்பு வாகனத்தில் சம்பவ இடத் திற்கு விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் தண்ணீரை பீச்சி அடித்து ஒரு மணி நேரத்திற்கு மேலாக போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். ஆக்கர் கடையின் உள்பகுதி முழுவதும் எரிந்து நாசமாகியது. மேலும் இந்த தீ விபத்து எப்படி நடந்தது என விசாரணை நடத்தி வரு கின்றனர்.

## தருமபுரியில் பணிஓய்வு பெற்ற

# தூய்மை பணியாளர் சேவையை பாராட்டி பரிசு வழங்கிய பொதுமக்கள்



தருமபுரி ஜூலை 02

தருமபுரி நகராட்சி சார்பில் 29 ஆவது வார்டு சூடாமணி தெருவில் தூய்மை பணியாளராக பணியாற்றி வருபவர் லட்சுமி .இவர் 30.06.2026 அன்று பணிஓய்வு பெறுவதையொட்டி சூடாமணி தெருவில் இருக்கும் குடியிருப்போர் நலசங்கம் சார்பில் தலைவர் பாலமுரளி,செயலாளர்சண்முகம்(எ)குட்டி,பொருளாளர் சுந்தரம், உறுப்பினர்கள் மற்றும் குடியிருப்புவாசிகள் இணைந்து தூய்மை பணியாளர் லட்சுமியின் சிறந்த சேவையை பாராட்டி அவரை கௌரவப்படுத்தும் வகையில் அவருக்கு பொன்னாடை அணிவித்து,இனிப்புகள் மற்றும் பரிசுகளை வழங்கி பாராட்டினார்கள்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.